**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP . No.58/2025</u>**

**<u>நாள் : 27.04.2026</u>**

**ம.சா. 1 திருமதி.வசந்தா**

**2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

**விபத்து நடந்து 1 ½ வருடமாகிறது. Sacred heart college எதிரில் விபத்து நடந்தது. விபத்து சமயத்தில் எனது பேத்தியை கல்லூரியில் விட்டுவிட்டு வீட்டிற்கு சென்றுக்கொண்டிருந்தேன் என்றால் நான் அந்த இடத்தில் நின்றுகொண்டிருந்ததாக சாட்சி கூறுகிறார். நான்தான் சாலையில் வந்த வாகனத்தை கவனிக்காமல் திடீரென்று குறுக்காக கடந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில்தான் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் சரிதான். நான் போக்குவரத்து செலவினங்கள், ஊட்டச்சத்து செலவினங்கள், தனியார் மருத்துவ பில்களுக்கான செலவினங்கள் அனைத்தும் மனுவில் மிகைப்படுத்தி சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து நடந்து 6 மாத காலத்திற்குள் மனுவை தாக்கல் செய்யாமல் காலதாமதமாக தாக்கல் செய்துள்ளதால் மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீட்டு தொகை மிகைப்படியானது என்றால் சரியல்ல.**

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி(FAC),
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.